# திருக்குடும்ப தேவாலயம் காஜாங்


*11, JALAN GEREJA, 43000 KAJANG*

**தொலைபேசி எண்** : *03-8733 1154*

**அகப்பக்கம்** :*www.hfckajang.org.my* **மின்அஞ்சல்** :*hfckajang@gmail.com*

***Scan for updates***


பங்கு அருள்பணியாளர் : மறைதிரு. மைக்கல் சுவா
துணை அருள்பணியாளர் : மறைதிரு. போனவென்ச்சர் ராயப்பன்
துணை அருள்பணியாளர் : மறைதிரு. பிலிப் சுவா

கல்லூரி/பல்கலைக்கழக குழு :
சகோ. மார்கிரேட் பெரேய்ரா ஆர்.ஜீ.எஸ்
pereiramargaret01@yahoo.com

## பங்கின் திருப்பலி நேரங்கள்

| திகதி | நேரம் | திருப்பலி | குறிப்பு |
|---|---|---|---|
| *05/07/2026 (ஞாயிறு)* | **காலை 7.00**<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30<br>மாலை 5.00 | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய்<br>திருப்பலி- புனித அன்னம்மாள் சிற்றாலயம் செமினி | பொதுக்காலம் 14 ஆம் வாரம் ஞாயிறு |
| *06/07/2026 (திங்கள்)* | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | புனித மரியகொரற்றி- கன்னியர்- மறைசாட்சி |
| *07/07/2026 (செவ்வாய்)* | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | வார நாட்கள் |
| *08/07/2026 (புதன்)* | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | வார நாட்கள் |
| *09/07/2026 (வியாழன்)* | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | புனிதர்கள் அகஸ்டின் ஜாவா ரோங்கு, தோழர்கள்- மறைசாட்சியர் |
| *10/07/2026 (வெள்ளி)* | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | வார நாட்கள் |
| *11/07/2026 (சனி)* | காலை 7.00<br>மாலை 5.30<br>மாலை 6.00 | திருப்பலி ஆங்கிலம்<br>இடைவிடா சகாய மாதா நவநாள் செபம்<br>திருப்பலி ஆங்கிலம் | புனித பெனடிக்ட் மறைசாட்சியர் |
| *12/07/2026 (ஞாயிறு)* | **காலை 7.00**<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30<br>மாலை 5.00 | **திருப்பலி தமிழ்**<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய்<br>**உறுதிபூசுதல் திருப்பலி** | பொதுக்காலம் 15 ஆம் வாரம் ஞாயிறு |

### *மரியியல் விளக்கவுரை (Formation Talk)*

இறைவனின் மீட்புத் திட்டத்தில் அன்னை மரியாவின் தனித்துவமான பங்கை நாம் இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள, அருள்பணியாளர் மைக்கேல் சுவா அவர்கள் வழிநடத்தும் இந்த விளக்கவுரையில் கலந்து கொள்ள உங்களை அழைக்கிறோம். திருவிவிலியம் மற்றும் திருஅவையின் பாரம்பரியம் வழியாக, அன்னையின் நான்கு முக்கிய மறைக்கோட்பாடுகளின் (Four Marian Dogmas) விவிலிய அடிப்படைகளையும் வரலாற்று வளர்ச்சியையும் நாம் ஆராய்வோம்:

- எப்பொழுதும் கன்னி (Perpetual Virginity)
- இறைவனின் தாய் (Divine Motherhood)
- அமல உற்பவம் - பாவக்கறையின்றி உதித்தவர் (Immaculate Conception)
- மரியாவின் விண்ணேற்பு (Assumption of Mary)
- நாள்: 25 ஜூலை 2026
- நேரம்: காலை 8.30 மணி (பதிவு செய்தல்) முதல் மதியம் 12.30 மணி வரை
- இடம்: திருக்குடும்ப ஆலயம், காஜாங் மண்டபம் (HFK Hall)
- அன்பு காணிக்கை: RM10 (சிற்றுண்டி சேர்க்கப்பட்டுள்ளது)




இதன் பதிவு வார இறுதி சனிக்கிழமை மாலை மற்றும் ஞாயிறு காலை திருப்பலிகளுக்குப் பிறகு நீங்கள் பதிவு செய்யலாம் / சுவரொட்டியில் (Poster) உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து பதிவு செய்யலாம். மேலும் விவரங்களுக்கு : கிறிஸ்டி பால் (Christi Paul): 012-3260125 / ஜோர்தானா ஜோசப் (Jordhana Joseph): 012-7726172 என்ற எண்ணில் தொடர்பு கொள்க.

**2026 ஆம் ஆண்டிற்கான செர்டாங் புனித அந்தோணியார் திருவிழா பின்வரும் நாட்களில் கொண்டாடப்படும்:**

Feast of St. Anthony




***17/07/2026 (வெள்ளிக்கிழமை)***
புனித யோசேப்பு : அமைதியில் விசுவாசத்துடன் கீழ்ப்படிதல்
நவநாள் திருப்பலி மாலை 7.00 மணிக்கு, அதனைத் தொடர்ந்து திருப்பலி மாலை 7.30 மணிக்கு நடைபெறும்.

***18/07/2026 (சனிக்கிழமை)***
அன்னை மரியா : இறைவனின் திட்டத்தில் நம்பிக்கை விசுவாசம்
நவநாள் திருப்பலி மாலை 5.30 மணிக்கு,அதனைத் தொடர்ந்து திருப்பலி மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

***19/07/2026 (ஞாயிற்றுக்கிழமை)***
இயேசு : அன்பின் உருவானவர் ;தந்தையின் திருவுளத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்தல்
நவநாள் திருப்பலி காலை 10.00 மணிக்கு,
அதனைத் தொடர்ந்து திருவிழா திருப்பலி காலை 10.30 மணிக்கு நடைபெறும்

# அறிவிப்புகள் & பங்கு நிகழ்வுகள்

### *BECCOT கூட்டம்*

தேதி: *08.07.2026* (புதன்கிழமை)
நேரம்: இரவு *8.30* மணி
இடம்: பழைய தேவாலயக் கட்டிடம், அறைகள் *1 & 2*

அனைத்து மண்டல *(Zone)* ஒருங்கிணைப்பாளர்களும் மற்றும் அடிப்படை கிறிஸ்தவ சமூக *(BEC)* ஒருங்கிணைப்பாளர்களும் கட்டாயமாகக் கலந்துகொள்ள வேண்டும். ஒருங்கிணைப்பாளர் வர இயலாத சூழ்நிலை ஏற்பட்டால், தங்களது முக்கிய செயற்குழு *(Core Team)* உறுப்பினர்களில் ஒருவரை தங்களுக்குப் பதிலாக அனுப்ப வேண்டும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

### உதவி மையம் *(Help Desk)*

இந்த வார இறுதியில் எங்களது உதவி மையம் *(Help Desk)* திறந்திருக்கும். பின்வரும் விடயங்கள் தொடர்பாக உங்களுக்கு உதவி வழங்கப்படும்:

- திருப்பலி காணிக்கை *(Mass Offering)*
- புதிய பங்கினர் பதிவு
- இல்ல ஆசீர்வாதம் பெறுவதற்கான விண்ணப்பம்
- திருமுழுக்கு *(Baptism)* தொடர்பான தகவல்கள்
- திருமண ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள்
- கத்தோலிக்க திருச்சபை நம்பிக்கையைப் பற்றி அறிய விரும்புவோருக்கான வழிகாட்டல்

ஏதேனும் கேள்விகள் அல்லது உதவி தேவைப்பட்டால், தயங்காமல் எங்களது உதவி மையத்தை அணுகுங்கள். உங்களுக்கு மகிழ்ச்சியுடன் உதவ தயாராக உள்ளோம்.

### இறைஊழியர் *(Servant of God)* பற்றிய ஆன்மீக உரை

**Sybil Kathigasu**

கத்தோலிக்க திருச்சபையில் *Canonization* என்பது, ஒரு கிறிஸ்தவர் தனது வாழ்நாளில் வீரத்தன்மைமிக்க நற்குணங்களுடன் வாழ்ந்து, இறைவனுக்கு உண்மை சாட்சியாக இருந்து, இப்போது விண்ணக மகிமையில் இருக்கிறார் என்று திருஅவை அதிகாரப்பூர்வமாக அறிவித்து, அவரை "புனிதர்" *(Saint)* என உலகமெங்கும் வணங்குவதற்கும் முன்மாதிரியாக ஏற்றுக்கொள்வதற்கும் வழங்கும் இறுதி அங்கீகாரமாகும்..அத்தகைய ஒரு உன்னத ஆன்மாவான **இறைஊழியர் சிபில் கார்த்கேசு** அவர்களின் வாழ்க்கையைப் பற்றிய ஆன்மீக உரையைக் கேட்கவும், அவரது வாழ்க்கை அனுபவத்தைக் கண்டறியவும் வாருங்கள்.

**நிகழ்ச்சி விவரங்கள்:**

**தேதி:** *11* ஜூலை *2026* (சனிக்கிழமை)
**நேரம்:** காலை *9.00* மணி முதல் மதியம் *12.00* மணி வரை
**இடம்:** பழைய ஆலயக் கட்டிடம் அறை *1* மற்றும் *2*
**உரையாளர்:** பிரிகேடியர் ஜெனரல் டத்தோ ஃபிரிட்ஸ்ஜெரால்ட்

### விவிலிய வகுப்பு

கடவுளின் ஞானமும் நீதி-நியாயமும் மனிதனின் அறிவுக்கும் சிந்தனைக்கும் எட்டாதவை, அப்பாற்பட்டவை. இதனைக் கற்பிக்கும் நூல் "யோபு".
நாள் : *19.07.26*
காலம் : ஞாயிறு மாலை *5*
இடம் : ஃபாதர் ஹென்ரியொட் அறை
தலைப்பு: யோபு
நடத்துநர்: அருள்பணி சுரேன் துரைராஜ்
அனைவரும் வருக!

### அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்

கார்மேல் மலை மாதா சகோதரிகள் நடத்தும் கார்மேல் மலை மாதா *(Our Lady of Mount Carmel)* பெருவிழாவை யொட்டி நடைபெறும் திருப்பலியில் கலந்து கொள்ள அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.
தேதி: *16.07.2026* (வியாழக்கிழமை)
நேரம்: மாலை *6.00* மணி
இடம்: இயேசு, மேரி& யோசேப்பு கார்மேல் ஆலயம்.

### உங்கள் காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி

**வார இறுதி காணிக்கை**

***27/6 & 28/6/2026 RM 14 543.00***

### உறுதிபூசுதல் பெறுபவர்களுக்கான ஒப்புரவு அருளடையாளம் (அதனைத் தொடர்ந்து ஒத்திகை நடைபெறும்)

தேதி: *10/07/2026* (வெள்ளிக்கிழமை)
நேரம்: இரவு *7.30* மணி (பதிவுடன் தொடங்கும்)

### உறுதிபூசுதல் திருப்பலி

தேதி: *12/07/2026* (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: மாலை *5.00* மணி
குறிப்பு: உறுதிபூசுதல் பெறும் அனைவரும் புகைப்பட அமர்விற்காக *(Photo session)* மாலை *3.00* மணிக்கே ஆலயத்தில் இருக்க வேண்டும்.

### பேராயர் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணையத்தின் அறிவிப்பு

"திருவழிபாட்டு வாழ்வை ஆழப்படுத்துதல்" என்ற அரைநாள் உருவாக்கப் பயிற்சித் தொடரின் இரண்டாவது அமர்வு இவ்வருடம் ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

நிகழ்ச்சி விவரங்கள் (இரண்டாவது அமர்வு)
தலைப்பு:திருப்பலியின் மறைபொருளை ஆழமாக அனுபவிப்போம்
தேதி:*18* ஜூலை *2026* (சனிக்கிழமை)
நேரம்:காலை *8.15* மணி – பிற்பகல் *1.30* மணி
இடம்:பெட்டாலிங் ஜெயா அசம்ப்ஷன் ஆலயம்
அன்பளிப்பு:*RM15*
யார் கலந்து கொள்ளலாம்?
அனைத்து இறைமக்களும் கலந்து கொள்ளலாம். குறிப்பாக, திருவழிபாட்டுப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் கலந்து கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.
குறிப்பு:இடவசதி குறைவாக இருப்பதால், முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
பதிவு செய்ய:
https://shorturl.at/cy4v4

அல்லது வழங்கப்பட்டுள்ள *QR* குறியீட்டை *(QR Code)* ஸ்கேன் செய்து பதிவு செய்யலாம்.

### இறைவார்த்தை & மறைக்கல்வி ஞாயிறு விழா

காலம்: *02.08.2026 @ 9.00am – 12.00pm*
இடம் : திருக்குடும்ப ஆலய மண்டபம்
போட்டிகள்:

| | | |
|---|---|---|
| *1* | வர்ணம் தீட்டும் போட்டி | பாலர்/*1*ம் வகுப்பு மாணவர் |
| *2* | பேச்சுப் போட்டி | மாணவர்/பொது |
| *3* | கட்டுரை போட்டி | இடைநிலை மாணவர்/பொது |
| *4* | இறைவார்த்தை வசன மனனப்போட்டி | பொது |
| *5* | விவிலிய/திருஅவை கதாப்பாத்திர வேடப்போட்டி | பொது |
| *6* | புதிர்ப் போட்டி | பொது |
| *7* | பட்டிமன்றம் | பொது |